| DEPOSITION OF WITNESS<br>(Chapter XXIII code of Criminal Procedure)<br>IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MANAPPARAI<br>Present : Thiru.R.Ashokumar, B.com.,B.L.<br>Judicial Magistrate, Manapparai | |
|---|---|
| Date: 04.06.2026 | |
| STC No. 706/2025 | |
| சாட்சி :PW1 | |
| பெயர் : திரு. ரெங்கசாமி | ஜாதி : |
| த/பெ/க/பெ. : திரு. சுருட்டை | தொழில் : கூலி |
| கிராமம் : ஊனையூர் | சமயம் : |
| தாலுக்கா : | வயது : 40/2026 |
| ( எதிரி ஆஜர் , வழக்கறிஞர் ஆஜர்) | |

---

**<u>முதல் விசாரணை (அரசு தரப்பில்)</u>**

1. நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். கூலி வேலை செய்து வருகிறேன். 8 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். ஆஜர் எதிரி எனக்கு உறவினர் ஆவார். அவருடன் நான் சமாதானமாக செல்கிறேன். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அதில் உள்ள விபரங்கள் எனக்கு தெரியாது. போலீசார் கேட்டுக்கொண்டதிற்கிணங்க நான் கையொப்பம் செய்து கொடுத்தேன். சம்பவ நேரத்தில் கும்பலாக இருந்ததால் என்னை யார் தாக்கினார்கள் என்று எனக்கு தெரியாது. **என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி அரசு தரப்பு சாட்சியத்தை அனுசரித்து சாட்சியம் அளிக்கவில்லை. அரசு தரப்பில் குறுக்கு விசாரணைக்கு அனுமதி கோரப்பட்டு அனுமதிக்கப்படுகிறது.**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

2. நான் எதிரியுடன் சமாதானமாகசெல்கிறேன் என்றால் சரிதான். நான் போலீசார் விசாரணையிலும், புகாரிலும் கடந்த 28.08.2023 அன்று மாலை 03.30 மணியளவில் எனது வீட்டிற்கு பின்புறம் இருந்த போது ஆஜர் எதிரி என்னை அசிங்கமாக திட்டினார் என்றும் அவர் என்னை குச்சியால் தாக்கினார் என்றும்

கொலை மிரட்டல் விடுத்தார் என்று கூறிவிட்டு தற்சமயம் எதிரி எனது உறவினர் என்பதால் அவரை இவ்வழக்கிலிருந்து விடுவிக்க உண்மை சங்கதிகளை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken over by me in open court read over
to the witness and admitted by the witness
to be correct.

Sd/–R.Ashokumar,B.com.,B.L.,
Judicial Magistrate,
Manapparai.

| DEPOSITION OF WITNESS<br>(Chapter XXIII code of Criminal Procedure)<br>IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MANAPPARAI<br>Present : Thiru.R.Ashokumar, B.com.,B.L.<br>Judicial Magistrate, Manapparai | |
|---|---|
| Date: 04.06.2026 | |
| STC No. 706/2025 | |
| சாட்சி :PW2 | |
| பெயர் : திருமதி. பவித்ரா | ஜாதி : |
| த/பெ/க/பெ. : திரு. ரெங்கசாமி | தொழில் : கூலி |
| கிராமம் : ஊனையூர் | சமயம் : |
| தாலுக்கா : | வயது : 24/2026 |
| ( எதிரி ஆஜர் , வழக்கறிஞர் ஆஜர்) | |

-------------------------------------------------------

<u>முதல் விசாரணை (அரசு தரப்பில்)</u>

1. நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். இல்லத்தரசியாக இருந்து வருகிறேன். 12 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். அ.சா.1 எனது கணவர் ஆவார். ஆஜர் எதிரி எனக்கு உறவினர் ஆவார். அவருடன் நாங்கள் சமாதானமாக செல்கிறோம். இவ்வழக்கு குறித்து எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி அரசு தரப்பு சாட்சியத்தை அனுசரித்து சாட்சியம் அளிக்கவில்லை. அரசு தரப்பில் குறுக்கு விசாரணைக்கு அனுமதி கோரப்பட்டு அனுமதிக்கப்படுகிறது.**
**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

2. எனது கணவர் எதிரியுடன் சமாதானமாக செல்கிறார் என்றால் சரிதான். நான் போலீசார் விசாரணையில், கடந்த 28.08.2023 அன்று மாலை 03.30 மணியளவில் எனது வீட்டிற்கு பின்புறம் இருந்த போது ஆஜர் எதிரி எனது கணவரை அசிங்கமாக திட்டினார் என்றும் அவர் எனது கணவரை குச்சியால் தாக்கினார் என்றும் கொலை மிரட்டல் விடுத்தார் என்றும் சம்பவத்தை நேரில் பார்த்தேன் என்றும் தற்சமயம் எதிரி எனது உறவினர் என்பதால் அவரை

இவ்வழக்கிலிருந்து விடுவிக்க உண்மை சங்கதிகளை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken over by me in open court read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-R.Ashokumar,B.com.,B.L.,
Judicial Magistrate,
Manapparai.